# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி:044-2951 5590

**ஆணை நாள் – 09.04.2025**

**முன்னிலை**

**முனைவர் மா. செல்வராஜ், எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.SA.16475/F/2024**

திரு சி. கருப்பையா -- மனுதாரர்

/எதிர்/

பொதுத்தகவல் அலுவலர் /
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டார வளர்ச்சி அலுவலகம், -- பொது அதிகார அமைப்பு
திருமானூர் - 621 715, அரியலூர் மாவட்டம்.

பார்வை:

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 09.08.2024 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 18.09.2024 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 17.12.2024 |

*******

**ஆணை**

இவ்வழக்கு இன்று (09.04.2025) இவ்வாணையத்தில் காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு மனுதாரர் திரு சி. கருப்பையா என்பவர் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீடு நடைமுறைகள்) விதிகள், 2012 விதி 7-ன்கீழ் மனுதாரர் விசாரணைக்கு ஆஜராக வேண்டுமென்பது அவசியமாகிறது. இருப்பினும் மனுதாரர் இவ்வாணையத்தின் அழைப்பாணையைப் பெற்றுக் கொண்டும், இன்றைய விசாரணைக்கு ஆஜராகவில்லை. அவரது வருகையின்மையை இவ்வாணையம் பதிவு செய்கிறது. பொது அதிகார அமைப்பின் சார்பாக திருமதி இரா. லதா, தலைமையிடத்து துணை வட்டாட்சியர் (ஊ), வட்டார வளர்ச்சி அலுவலகம், திருமானூர், அரியலூர் மாவட்டம் என்பவர் ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ், அரியலூர் மாவட்டம், திருமானூர் வட்டார வளர்ச்சி அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், அரியலூர் மாவட்டம் மற்றும் வட்டம் கீழக்காவமடாங்குறிச்சி வருவாய் கிராம புல எண்.318-ல், 1905-ஆம் ஆண்டு சென்னை

III-வது சட்டத்தின்கீழ் 6வது மற்றும் 7வது பிரிவின்கீழ் தயார் செய்யப்பட்ட முதல் அறிவுப்பு கடிதமானது எந்த தேதியில் வட்டார வளர்ச்சி லுவலர் அவர்களால் கையொப்பமிடப்பட்டது என்பது பற்றிய விவரம், மேற்கண்ட புல எண்.318-க்கு சுற்றியுள்ள புலங்களில் உள்ள நபர்களுக்கு பிறப்பிக்கப்பட்ட முதல் அறிவிப்பு கடிதம் எந்த தேதியில் பதிவஞ்சலில் நான்கெல்லையில் உள்ள அனைத்து நபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது என்பது பற்றிய விவரம், மேற்கண்ட புல எண்.318-க்கு முதல் அறிவிப்பு கடிதமானது எந்தெந்த நபர்களால் பெற்றுக்கொள்ளப்படாமல் வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்கே கடிதம் திருப்பப்பட்டது என்பது பற்றிய விவரம், அரியலூர் மாவட்டம் மற்றும் வட்டம் கீழக்காவமடாங்குறிச்சி வருவாய் கிராம புல எண்.318-ல், 1905-ஆம் ஆண்டு சென்னை III-வது சட்டத்தின்கீழ் 6வது மற்றும் 7வது பிரிவின்கீழ் தயார் செய்யப்பட்ட இரண்டாவது அறிவிப்பு கடிதமானது எந்த தேதியில் வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களால் கையொப்பமிடப்பட்டது என்பது பற்றிய விவரம், மேற்கண்ட புல எண்.318-க்கு சென்னை III-வது சட்டத்தின்கீழ் 6வது மற்றும் 7வது பிரிவில் பிறப்பிக்கப்பட்ட முதல் அறிவிப்பு மற்றும் இரண்டாம் அறிவிப்பு கடிதத்தில் சான்றொப்பமிட்ட உண்மை நகல் உள்ளிட்ட முழு விவரங்களை மொத்தம் 7 இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு தகவல்கள் வழங்கப்படவில்லை எனபதால், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். அம்மனுவிற்கும் தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் தனது இரண்டாவது மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அதனடிப்படையில், மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (09.04.2025) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு தகவல்கள் வழங்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்து, அதற்கான ந.க. எண்.ஆ1/2015/2024 நாள் 02.04.2025 தேதியிட்ட ஆவண நகல்களை இவ்வாணையத்தின் பார்வைக்கும் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், பொதுத் தகவல் அலுவலரால் மனுதாரருக்கு வழங்கப்படும் தகவல்களை இவ்வாணையம் கவனமுடன் பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு அத்தகவல்கள் போதுமானது எனக்கருதுகிறது. மேலும், மனுதாரருக்கு வழங்கப்படும் தகவல்களில் ***'தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி தகவல்கள் வழங்கப்படுகிறது' என்ற முத்திரையுடன் ஒவ்வொரு பக்கத்திலும் சான்றொப்பமிட்டு*** இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஏழு நாட்களுக்குள் மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து, மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகலினை இவ்வாணையத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டு, மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA.16475/F/2024</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**
பொதுத்தகவல் அலுவலர் /
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
திருமானூர் - 621 715, அரியலூர் மாவட்டம்.

**<u>வழக்கு எண்.SA.16475/F/2024</u>**
**<u>மனுதாரர்</u>**
திரு சி. கருப்பையா, த/பெ. சின்னப்புடையார்,
எண்.4/66, வடக்கு தெரு,
கீழக்காவமடாங்குறிச்சி (கி),
அரியலூர் வட்டம் & மாவட்டம் - 621 715.

Copy to: File
SNPS / 11 .04.2025